## ① அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப்பொருத்தமானதைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.

1. தமிழில் உள்ள முதல் எழுத்துகள் ______________________ ஆகும்.
   (இருபது, முப்பது, பன்னிரண்டு)

2. பரதநாட்டிய நிகழ்வுகளில் இடம்பெறும் தோற்கருவி ______________________.
   (மிருதங்கம், முரசு, மேளம்)

3. திருவள்ளுவர் ______________________ என்ற நூலை எழுதினார்.
   (திருக்குறள், சிலப்பதிகாரம், தமிழ்வழி)

4. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் ________________.
   (217, 247, 227)

5. ஈழமும் தமிழகமும் ______________________ தாயகங்கள்.
   (தமிழரின், சிங்களவரின், சீனர்களின்)

6. முத்தமிழ் எனப்படுபவை______________________ ஆகும்.
   (மா-பலா-வாழை, இயல்-இசை-நாடகம், பால்-தயிர்-மோர்)

7. '**முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்**' ஒரு ________________.
   (பழமொழி, நாலடியார், திருக்குறள்)

8. உடற்பயிற்சி செய்வதால் உடலும் ______________________ உறுதிபெறும்.
   (தலையும், முகமும், உள்ளமும்)

9. கூலங்கள் என்றால் ______________________ போன்றவையாகும்.
   (கத்தரி-மிளகாய்-கீரை, மா-பலா-வாழை, நெல்-பயறு-உழுந்து)

10. வைகறை என்பது ______________________.
    (மாலைக்காலம், பகற்காலம், விடியற்காலம்)

11. தன்பலம் கொண்டு ______________________ ஏறவேண்டும்.
    (அம்பலம், சம்பளம், பின்பலம்)

12. நேற்று பள்ளியில் நான் நடனம் ______________________.
    (ஆடுவேன், ஆடுகின்றேன், ஆடினேன்)

13. ஆடி மாதத்தில் கொண்டாடப்படுவது _______________.
(தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு, நத்தார்)

14. '**துன்பம்**' என்பதன் பொருள் ______________________.
(சந்தோசம், மகிழ்ச்சி, கவலை)

15. தமிழ்மொழிக்கு மட்டும் உள்ள சிறப்பு ஒலி __________________ ஆகும்.
(ல, ள, ழ)

16. திருக்குறளில் __________________ வரிகள் இருக்கும்.
(இரண்டு, மூன்று, ஆறு)

17. காட்டு இராசாவாக வாழ்ந்த விலங்கு __________________.
(புலி, கரடி, சிங்கம்)

18. பின்வரும் எழுத்துகளில் உயிரெழுத்துக் கூட்டம் _______________________ .
(ஆ-ஊ-எ, டி-கு-வு, க்-ப்-ச்)

19. பயத்தினால் எனது இதயம் _______________ என அடித்தது.
(சலசல, குடுகுடு, படபட)

20. '**ஐந்து வீட்டுக்கொரு முற்றம்**' எனப்படுவது_______________________ .
(மூக்கு, உள்ளங்கை, கண்)

21. ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு _______________________ குடிப்பதாகும்.
(ஆடிக்கூழ், பாற்கஞ்சி, பால்தேநீர்)

22. நல்ல __________________ பண்புள்ள மனிதனை உருவாக்கும்.
(குடும்பம், பணம், பதவி)

23. இராவணன் தனது கொடியில் _______________________ச் சின்னமாகக் கொண்டிருந்தான்.
(வீணையை, வயலினை, அம்பை)

24. கோலாட்டாம் ஆடுபவர்களுடைய இருகைகளிலும்_______________________ இருக்கும்.
(பந்து, துணி, கோல்கள்)

25. இங்கு பலவகையான பழங்கள் உள்ளன. _______________________ உனக்கு விருப்பமானதை எடுத்து உண்.

(அவற்றுள், இவற்றுள், ஒவ்வொன்றும்)

26. சேரன் பற்களை ________________________ எனக் கடித்தான்.
(கடகட, குடுகுடு, நறநற,)

27. நான் ________________________ ஓவியம் மிகவும் அழகாக இருந்தது.
(வறைந்த, வரைந்த, வரந்த)

28. கதிரவன் ________________________ உதிக்கும்.
(காலையில், காலைக்குள், காலையால்)

29. நான் ________________________ உனது நூலைத் தரவேண்டும்?
(எப்பொழுது, இப்பொழுது, அப்பொழுது)

30. சிலப்பதிகாரத்தை எழுதியவர் ________________________ .
(திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஔவையார்)

**(புள்ளிகள் 30)**

## ② பாடநூல் வினாக்களுக்கு முழுமையான விடை தருக.

1. ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு எது?

________________________________________

________________________________________

2. முக்கனிகள் எவை?

________________________________________

________________________________________

3. மிருதங்கம் என்னும் முழவு எந்தெந்த நிகழ்ச்சிகளில் சிறப்பிடம் பெறுகிறது?

________________________________________

________________________________________

**(புள்ளிகள் 10)**

③ **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி சொல்லியங்களை நிறைவு செய்க.**

| |
|---|
| **இன்பதுன்பம் / மணிமணியாக / பார்க்கப்பார்க்க / வண்ணவண்ண / ஓட்டமும்நடையுமாக** |

1. பூஞ்சோலையில் ______________________ மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.
2. பிறருக்கு ______________________ ஏற்படும் போது நாமும் பங்கு கொள்வது மனிதத்தன்மையாகும்.
3. அண்ணா உதைபந்து விளையாடுவதற்காக ______________________ ச் சென்றான்.
4. நான் உறுப்பெழுத்துப் போட்டிக்கு ______________________ எழுதியதால் பரிசு கிடைத்தது.
5. தாயகத்தில் கட்டிய வீட்டைப் ______________________ அழகாக இருந்தது.

**(புள்ளிகள் 10)**

④ **பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. நாளை தமிழினியும் மாலினியும் கடற்கரைக்குச் ______________________.
2. அம்மா சமைத்த உணவு மிகச் சுவையாக ______________________.
3. நான் நன்றாகப் படம் வரைந்ததாக ஆசிரியர் ______________________.
4. நாளை கலைவிழாவில் மாணவர்கள் சிறப்பாக நாடகம் ______________________.
5. கபிலன் தனது தாயாருடன் பள்ளிக்குச் ______________________.

**(புள்ளிகள் 10)**

## ⑤ தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| அருகில் / கற்குவியல் / மகிழ்ச்சியுடன் / அலைந்து / பார்த்தது |
|---|

கோடை காலத்தில் காகம் ஒன்று தாகத்தால் தவித்தது. தண்ணீர் தேடி அங்கும் இங்கும் ____________________, கடைசியில் ஓர் இடத்தில் தண்ணீர் இருந்த குடத்தைக் கண்டது.

உடனே அதன் ______________________ சென்று எட்டிப் பார்த்தது. தண்ணீர் மிகவும் அடியில் இருந்தது. இதை நான் எப்படிக் குடிப்பது என்று எண்ணி நாலாபக்கமும் _________________________ . அதற்கு ஒரு யோசனை தோன்றியது.

அதனருகே ________________________ ஒன்று இருந்ததைக் கண்டது. அருகில் சென்று தனது அலகால் கற்களை ஒவ்வொன்றாக எடுத்து வந்து குடத்திற்குள் போட்டது. தண்ணீர் மேலேமேலே வந்தது. தண்ணீர் மேலே வந்ததும் அதைக் குடித்த காகம் ____________________________ பறந்து சென்றது.

**(புள்ளிகள் 10)**

## ⑥ கீழுள்ள பகுதியைப் படித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

உலகில் உள்ள பிராணிகளில் மிகவும் உயரமானது ஒட்டகச்சிவிங்கியாகும். இது இருபது அடி உயரம் வரை வளரும். ஒட்டகம் போன்று நீண்ட உடலமைப்பும் சிறுத்தைப் புலியைப் போல் புள்ளிகளும் இருப்பதால் இது ஒட்டகச்சிவிங்கி எனப்படுகிறது.

ஆபிரிக்க நாட்டில் ஏராளமாகக் காணப்படுகிறது. இது வரண்ட வெப்பமான இடங்களில் வாழும். இதன் கண்கள் மிக அழகானவை; கூர்மையானவை; தலையைத் திருப்பாமலே எங்கும் பார்க்கும். இது கத்துவதில்லை. ஏனெனில் இதற்குக் குரல் கிடையாது. மிக மெல்லிய ஒலியும் இதற்குத் தெளிவாகக் கேட்கும். நீர் குடிக்காமலே பல நாள் இது உயிர் வாழும். இது மிகவும் சாதுவானது. ஆனால் கோபம் வந்தால் சிங்கத்துடன் போராடும். குதிரையை விட வேகமாக ஓடும்.

1) உலகில் உள்ள பிராணிகளில் மிகவும் உயரமானது எது?

2) இது எந்த நாட்டில் ஏராளமாகக் காணப்படுகிறது?

3) இதன் கண்கள் எப்படிப்பட்டவை?

4) இது ஏன் கத்துவதில்லை?

5) இது எப்போது சிங்கத்துடன் போராடும்?

**(புள்ளிகள் 15)**

**⑦ படத்தைப் பார்த்து 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.**



<u>உதவிச்சொற்கள்:</u>

மரம், புறா, குளம், வேடன், அம்பு, இலை, தத்தளித்தது, குறிபார்த்தான், கடித்தது, தப்பித்து, ஏறிக்கொண்டது.

**(புள்ளிகள் 15)**